திரு .வ. ஈஸ்வரமூர்த்தி &

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஓராண்டுக்கும் மேலாக மாநில வேலை வாய்ப்பகத்தின் வேலைபெருநவர் பதிவேட்டில் பதிவு செய்துள்ள

1. மருத்துவப் பட்டதாரிகள்,

2. அறிவியல் பட்டதாரிகள்,

3. பொறியியலில் தகுதிப்பட்டயம் (Dploma) பெற்றவர்கள் ஆகியோரது எண்ணிக்கை இன்றுவரை என்ன ?

மாண்புமிகு திரு. சே. மாதவன் :

22—2—1972 அன்றுள்ள நிலைமைப்படி இம்மாநிலத்திலுள்ள வேலை தேடித் தரும் நிறுவனங்களின் நடப்புப் பதிவேட்டில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக இருந்து வருகின்ற பட்டதாரிகள், பட்டயத் தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :

(அ) மருத்துவப் பட்டதாரிகள்	25
(இ) அறிவியல் பட்டதாரிகள்	5257
(உ) பொறியியலில் பட்டயத் தகுதி பெற்றவர்கள்.	2223

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சயன்ஸ் கிராஜுவேட்சைப் பற்றிக் கேட்டதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆர்ட்ஸ் கிராஜுவேட்சைப் பற்றித் தனியாக இல்லை.

*15. Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of candidates registered in the Employment Exchanges in Madras City during 1971 month-wise; and

(b) the registration made per day on an average by these offices?

வேலை வாய்ப்பு அலுவலகங்கள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில், திங்கள் வாரியாக, பதிவு செய்துள்ளோரின் எண்ணிக்கை யாது?

1972 ஆகஸ்டு 9]

(இ) இந்த அலுவலகங்களில் நாளொன்றுக்குச் செய்யப்படும் சராசரி பதிவுகளின் எண்ணிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது குறித்த விவரங்கள் @ சட்டமன்ற பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன.

* 16. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the Graduate Registrants with the Employment Exchanges for the physically handicapped as on 31st December, 1971?

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் கணக்கின்படி, உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து கொண்ட பட்டதாரிகள் பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 31-12-1971 அன்றுள்ளபடி, சென்னை நந்தனத்திலுள்ள உடலூனமுற்றவர்களுக்கான வேலை வாய்ப்பகத்தின் நடப்புப் பதிவேட்டில் 40 பட்டதாரிகள் பதிவு செய்து கொண்டிருந்தனர். அவர்களில் 33 பேர்கள் ஆண்கள். இவர்களில், ஒருவர் குருடர், இருவர் செவிடர், 30 பேர் முடமானவர்கள் ஆவர். எஞ்சிய 7 பேர் பெண்கள். இவர்களனைவரும் முடமானவர்களாவர்.

THIRU D. SANTOSHAM : Sir, have instructions been given to the Public Service Commission and other employing agencies that preference should be given to those physically handicapped persons, who are found fit for clerical job or any other similar job?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படி உடல் ஊனமுற்றவர்களுக்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட சதவீத வேலை வாய்ப்பு ஒதுக்கப்பட வேண்டுமென்ற கொள்கை இருக்கிறது. ஆனுல் இதற்கான முடிவு எடுக்கப்படவில்லை. இப்போது இந்த வேலை தேடித்தரும் துறையிலே ஒரு பிரிவு செயல்பட்டு எப்படி அதிகமாக இவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தர வேண்டுமென்ற முயற்சியில் இருக்கிறது. கட்டாயமாக பப்ளிக் சர்வீஸ் கமிஷனே அல்லது தனியார் துறையோ இத்தனை சத வீதம் எடுக்க வேண்டுமென்று இல்லை. அப்படி வேலைக்கு எடுக்கப்பட்டவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் பரிசுகள் மற்றவைகள் கொடுத்து ஊக்குவிக்கிறேம்.

@ 94-96-ஆம் பக்கங்களில் இணைப்பு -ஆக அச்சிடப்பட்டுள்ளது.